முருகப்பெருமான் துணை

**மகான் போகமகரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.05.2022, வெள்ளிக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
   ஞானம் அருளும் தேசிகா வாழ்க
   தான தரும பலம் அகிலம்
   தக்கபடி முழுமைபட அடைய
2. அடைய அன்னதான சேவை
   ஆற்றுகின்ற ஞானியே வாழ்க
   தடையற உன் பெருமை கூறி
   தாமுரைப்பேன் சுபகிருது விடை திங்கள்
3. திங்களிலே முன்னான்கோர் திகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் வைகாசி மாதம் 13 ம் நாள், 27.05.2022 வெள்ளிக்கிழமை)
   தேசிகனுக்கு போகமகரிஷி யானும்
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடில் எனும் ஆறுமுகனார்
4. ஆறுமுகனார் ஏழாம்படைவீட்டை
   அடையாளம் கண்டு வந்தவர்க்கு
   ஏறுமுகமும் நல்ல மாறுதலும்
   இனிதே சடுதி காணுமப்பா
5. அப்பனே ஆறுமுகா எனவும்
   அரங்கமகா தேசிகா எனவும்
   ஒப்புக் கொண்டு வரும் மக்களுக்கு
   ஓங்காரன் பாதுகாப்பு உறுதிஆகும்
6. ஆகவே ஞான பலமுடன்
   அறம் தரும வழிகளை காட்டும்
   மகான் தேசிகன் ஆசிதரும்
   மகத்துவம் மிக்கக் குடிலை
7. குடிலை நாடி தங்கிவிட
   குடிலின் அருளமுது உண்டு
   குடிலின் சேவைதனில் கலந்து
   குறைவிலா சேவை ஆற்றிவர
8. வருகவே மனிதர்களிடையே
   வதை செய்யும் தீகுணங்கள்
   தரும பலத்தால் கரைந்தோடி
   தயவே வடிவாக பொறிபுலன் அனைத்தும்
9. அனைத்தும் ஏகநிலைக்கு வந்து
   ஆறுமுக அரங்க மகானின்
   துணைபட சாத்வீக சமத்துவ
   தெய்வ நெறிபட இயங்கலாகும்

10. ஆகவே இந்தநிலை கூடி
அவரவரும் ஞானவானாக
மிகைபட மாற்றம் கண்டு
முருகப்பெருமான் ஆசிக்கு வந்து

11. வந்துமே உலகை மாற்றும்
வரமும் வல்லமையும் பெற்று
சிந்தைபட ஞானஆட்சி படைப்பர்
செப்பிய அருளாசி முற்றே

—சுபம்—